# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.


3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate

+91 9996 12 9996


Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



பதிவு அஞ்சல் ஒப்புகை சான்றுடன்

நகர் ஊரமைப்புத் துறை


| | |
|---|---|
| திரு. ...மாலன், பி.இ | பெறுநர் |
| இணை இயக்குநர், | தலைவர், |
| மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், | ஆணையூர் ஊராட்சி, |
| கதவு எண் 870, | சிவகாசி வட்டம், |
| தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய மனைப்பிரிவு, | விருதுநகர் மாவட்டம் |
| மதுரை சாலை, சத்திரரெட்டியபட்டி, | |
| விருதுநகர் மாவட்டம் -626 001 | |
| Phone No 04562 296650, | |
| Website www.tn.gov.in/dtcp | |
| Email vnraddtcpoffice@gmail.com | |


ந.க.எண். 268/2022, விருமா. நாள் .26.04.2022.

ஐயா,

பொருள் : மனைப்பிரிவு - விருதுநகர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் விருதுநகர் மாவட்டம் - சிவகாசி வட்டம் - சிவகாசி ஊராட்சி ஒன்றியம் - ஆணையூர் ஊராட்சி - ஆணையூர் கிராமம் - சர்வே எண்கள். 1350/1, 1350/2, 1353/4 மற்றும் 1353/9 - இல் 17700.00 சதுர மீட்டர் (4.37 ஏக்கர்) பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான அனுமதி/இசைவு ஒப்புதல் வழங்குதல் - குறித்து.

பார்வை:
1. மனுதாரர். திருமதி.A.சீமாட்டி, அவர்களின் விண்ணப்பம் நாள் 09.02.2022.
2. மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், விருதுநகர் மாவட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண்.268/2022, நாள்.18.03.2022.
3. நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம், ந.க.எண்.19799/2020/போ, நாள்.24.12.2020.
4. மனுதாரர். திருமதி.A.சீமாட்டி அவர்களின் கடிதம் நாள்.08.04.2022.
5. அரசாணை எண். 138, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள். 04.06.2004.
6. அரசாணை எண். 79, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள். 04.05.2017.
7. அரசாணை எண். 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 04.02.2019 மற்றும் அரசாணை எண். 16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 31.01.2020.
8. அரசாணை எண். 141, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை UD4(3), நாள்.23.09.2020.
9. அரசாணை எண். 181, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை UD4(1), நாள்.09.12.2020.
10. அரசு கடிதம் எண்.19113/நவ4(3)/2017-1, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, நாள் 30.08.2017.
11. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 13686/2017/LA1, நாள். 08.09.2017.
12. இவ்வலுவலக கடிதம் இதே எண். நாள்.13.04.2022.
13. மனுதாரர் கடிதம் நாள்.20.04.2022.

****

பார்வை 1 -ல் கட்டிய கடிதத்துடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதலுக்கான கோரிக்கை, பரிசீலிக்கப்பட்டு, பார்வை 2 -ல் கட்டிய இவ்வலுவலக கடிதம் நாள் 18.03.2022 மூலம் மனைப்பிரிவு சாலை ,அமைப்பு வரைபடம் இசைவு வழங்கப்பட்டது. பார்வை 3 -ல் கட்டிய கடிதம் மூலம் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை உள்ளாட்சியிடம் தானமாக தானப்பத்திர எண்.3772/2022, நாள்.04.04.2022 -ல் ஒப்படைக்கப்பட்டு பெறப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

2) மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு ந.வ/மா.ந.ஊ.து.இ,(விருமா)எண்.22/2022 என எண்ணிடப்பட்டு 5 அசல் வரைபடங்கள் மற்றும் அசல் தானப்பத்திரம் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பிவைக்கப்படுகிறது.

3) மேலும், உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.9(ஆ)-ன்படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4) உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும், நில அளவைத் துறைக்கும், தகவலுக்கும், உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

5) செயலாணைக் கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகைச்சான்றினை உடன் அனுப்பிவைக்குமாறும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

சிறப்பு நிபந்தனைகள்

1. (a) பார்வை 10-ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை 8-ல் கண்ட TNCDBR-2019 விதி எண்.47 (11)-ன்படியும் மாநகராட்சி,நகராட்சி பகுதி எனில் "Collecting the necessary fees including the charges for providing amenities like roads, storm water drains and street lights from the applicants". After collecting the necessary fees the final layout sketch/ permit of Planning authority along with approval local Body shall be issued to the applicant(s) directly.
2. (EWS) பொளாதாரத்தால் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது. ஆனால் கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட 3 வருடங்களுக்கு மேலாகியும் EWS மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அரசாணை எண்.16.நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்,31.01.2020-ன்படி EWS மனைகளை ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.
3. பார்வை 11 மற்றும் 12-ல் கண்ட அரசு கடிதம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின்பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

83

4. The Tamil Nadu Government in G.O.Ms.No 112. Housing and Urban Development Department dated:22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development Act 2016), The promoter has to advertise, market, book sell or offer for sale or invite persons to purchase in any manner any plot, apartment or building , as the case may be, in any Real Estate Project or part if it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority ன்படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

5. பார்வை 6 -ல் கண்டுள்ள அரசாணையின்படி திட்டமில்லா பகுதி/திட்டப்பகுதியில் அமையும் மனைப்பிரிவு எனில் விதி எண்.3-ன்படி கூராய்வு கட்டணமாக ரூ.1000/-ஐயும் மற்றும் விதி எண்.9-ன்படி இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகையை நிலப்பயன் மாற்றக் கட்டணமாகவும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் வசூல செய்த பிறகே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

6. பார்வை 5,6, 7 மற்றும் 9 -ல் காணும் அரசாணையின்படி மனைகளுக்கான நன்னிலை வரி, மற்றும் இதர கட்டணங்களை பார்வை -13 ல் கண்டுள்ள மனுதாரர் கடிதம் மூலம் துணை இயக்குநர், விருதுநகர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் அவர்களால் பெறப்பட்ட பின்னரே திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.. மேலும் கொடிநாள் நிதியாக நன்னிலைவரி கட்டணத்தில் 20% தொகையை "Armed Force Flag Day Fund" என்ற பெயரில் Payable at Chennai என தேசியமயமாக்கப்பட்ட வங்கியின் வரைவோலை இவ்வலுவலகத்தில் பெறப்பட்டுள்ளது என்ற விபரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

துணை இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
விருதுநகர் மாவட்டம்.

25/4/2022

<u>இணைப்பு</u>
வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்
(5 தொகுப்பு மற்றும் அசல் தானபத்திரம்)

<u>நகல்</u>

1. மனுதாரர்
திருமதி.A.சீமாட்டி,
520, ஞானகிரி ரோடு,
சிவகாசி - 626 189,
விருதுநகர் மாவட்டம். (பத்தி ஒன்று மட்டும்)

2. தமிழ்நாடு கட்டிட மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமம்,
(தமிழ்நாடு அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள்),
டவர் - 2 (முதல் மாடி),
நெ 1.காந்தி - இர்வின் சாலை,
எழும்பூர், சென்னை 600 008.

3. அனுப்பு கோப்பு (வரைபடம்-1(ம) நிபந்தனைகள் படிவம்-1)

4. கோப்பு (வரைபடம்-1(ம) நிபந்தனைகள் படிவம்-1)

தமிழ்நாடு அரசு
நகர் ஊரமைப்புத் துறை,சென்னை

ந.க.எண்.268/2022 விருமா, நாள்.25.04.2022.

மனைப்பிரிவு ம.வ/ந.ஊ.இ.எண்.22/2022.

---

## மனைப்பிரிவு நிபந்தனைகள்

1. நகர் ஊரமைப்புத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.

2. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்பட வேண்டும்.

3. மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த மனையிலும் கட்டடம் கட்டவோ கூடாது.

4. அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். மேலும் மனை உபயோகம் மாற்றம் கோரும் இடங்களில் மட்டுமே TNCDBR-2019-ல் குறிப்பிட்டுள்ள Residential use-ல் குறிப்பிடப்பட்டுள்ளவைகளுக்கு மட்டுமே நகர் ஊரமைப்பு துறையின் முன் அனுமதி பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் அனுமதிக்கப்பட வேண்டும்.

5. மனையின் ஊடே குறைந்த அழுத்த / உயர் அழுத்த மின்கம்பிப் பாதை / தந்திக் கம்பிப்பாதை அமைந்தால், கம்பிப் பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றி அமைக்க வேண்டும்.

6. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.

7. 9 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் அமைக்கப்பட வேண்டும்.

8. மனுதாரர்களால் மனைப்பிரிவு அமைக்கப்பட்டுள்ள **தலைவர், ஆணையூர் ஊராட்சி,** அவர்களிடம் இறுதி ஒப்புதல் பெற்றுக் கொள்ள வேண்டும். மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டடத்திற்கும் உள்ளாட்சியிலிருந்து அனுமதி பெற வேண்டும்.

9. அ. மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்புத் துறையால் அனுமதி/இசைவு (Planning Permission / Concurrence) மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்பதால் மனைப்பிரிவிற்கான இட உரிமைத் தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உள்ளாட்சியினரால் பரிசீலித்து முடிவு எடுக்கப்பட வேண்டும்.

ஆ. மேற்படி மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும்போது அங்கீகார நிர்வாக அதிகாரியின் முன்னிலை நடவடிக்கையின் நகலினை இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்ப வேண்டும். இதில் பொது திறவிடங்கள் உள்ளாட்சியிடம் ஒப்படைத்ததற்கான சான்றும் இணைக்கப்பட வேண்டும்.

10. மனுதாரர், நகர் ஊரமைப்புத் துறையிடமிருந்து மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில், ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம்/ விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6’ x 4’ அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்காவும் மேலும் மனைப்பிரிவு அங்கீகரித்த மற்ற தீர்மான எண்ணும், நாளும் தெளிவாக குறிப்பிட்டு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

11. மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி நில உரிமம் குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே உண்மையில் நில உரிமம் இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்காக எந்த உரிமையும் கொண்டாட முடியாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

12. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறிவிக்கப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு Planning Permission/Concurrence ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட Planning Permission/Concurrence ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் இரத்து செய்யப்படும்.

13. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

## அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம்

| விபரம் | | பரப்பளவு விழுக்காடு |
|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | - | 4.37 ஏக்கர் (17700.00 ச.மீ) |
| ஒதுக்கிய மனைகள் | - | 68 எண்ணம். |
| பொது ஒதுக்கீடு<br>மனுதாரர் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டது. | | |
| பூங்கா பரப்பு | - | பூங்கா - 1 = 826.72 ச.மீ.<br>பூங்கா - 2 = 583.27 ச.மீ.<br>------------------<br>மொத்தம் = 1409.99 ச.மீ. (10.09%)<br>------------------ |
| 2. உத்தேச சாலைகள் மற்றும் மூலை முடக்குகள் | - | 4791.16 ச.மீ (27.06 %) |
| 3.உள்ளாட்சிக்கான ஒதுக்கீடு | - | 68.49 ச.மீ. (0.53%) |
| 5.தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கானது. | - | 70.76 ச.மீ. (0.55%) |
| விற்பனைக்குரியவை<br>சாதாரண மனைகள்<br>மனை எண்கள் | -<br>- | 48 எண்ணம்.<br>(1 முதல் 28 வரை<br>49 முதல் 68 வரை). |
| குறைந்த வருவாய் பிரிவினர் (EWS) மனைகள்<br>மனை எண்கள் | -<br>- | 20 எண்ணம். (10.04%)<br>29 முதல் 48 வரை. |
| கடை மனை | - | 1 எண்ணம்.<br>360.09 ச.மீ (2.27%) |

துணை இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
விருதுநகர் மாவட்டம்.

25/4/2022

# ஆனையூர் ஊராட்சி மன்றத் தலைவர்(பொறுப்பு) அவர்களின் நடவடிக்கைகள்
## முன்னிலை: திருமதி.த.முத்துமாரி

ஆ/02/2022

நாள்: 27.07.2022

பொருள்: மனைப்பிரிவு - விருதுநகர் மாவட்டம் - சிவகாசி ஊராட்சி ஒன்றியம் - ஆனையூர் ஊராட்சி - ஆனையூர் கிராமம் சர்வே எண்: 1350/1, 1350/2, 1353/4, 1353/9ல் ஏக்கர் 4.37 (17700ச.மீ) பரப்பளவில் அமையும் 68 மனைப்பிரிவுகளுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது - உரிய கட்டணங்கள் செலுத்தப்பட்டது - மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கி - உத்தரவிடல்.

பார்வை: 1. மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், விருதுநகர் மாவட்டம், அவர்களின் கடிதம் ந.க.எண். 221/2022/விருமா. நாள்: 14.05.2022.

2. மனுதாரர் திரு.A.சீமாட்டி அவர்களின் விண்ணப்பம் நாள்:

3. சார்பதிவாளர் அலுவலகம், சிவகாசி, அவர்களின் சந்தை மதிப்பீட்டு சான்று, நாள்: 07.06.2022:

-----

**உத்தரவு**

சிவகாசி ஊராட்சி ஒன்றியம், ஆனையூர் ஊராட்சி, ஆனையூர் கிராமம் சர்வே எண்: 1350/1, 1350/2, 1353/4, 1353/9-ல் ஏக்கர் 4.37 (17700 ச.மீ) பரப்பளவில் அமையும் 68 மனைப்பிரிவுகளுக்கு பார்வை (1)ல் காணும் கடிதம் வாயிலாக தொழில்நுட்பம் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி மனைநிலத்தில் அமைந்துள்ள 68 மனைகளுக்கு கூராய்வு கட்டணம் மற்றும் பார்வை 3ல் காணும் கடிதத்தின்படி இடத்தின் சந்தை மதிப்பு ஏக்கருக்கு 3% நிலப்பயன் மாற்றக் கட்டணம் பெற்றுக் கொண்டு இறுதி ஒப்புதல் வழங்குமாறு கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, செலுத்தப்பட வேண்டிய கூராய்வு கட்டணம் ரூ.1000/- வீதம் 68 மனைகளுக்கு பல்வகை ரசீது எண்: 5947, நாள்: 27.07.2022-ன்படி ரூ.68000-/ ஊராட்சி பொதுநிதிக் கணக்கிலும் மற்றும் சந்தை மதிப்பு ஏக்கருக்கு 3% என்ற அடிப்படையில் 4.37 ஏக்கருக்கு நிலப்பயன் மாற்றக் கட்டணமாக ரூ.99865/- அரசு தலைப்பிலும் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது. எனவே, மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

| சர்வே எண்கள் | மனைப்பிரிவு எண்கள் | மனைப்பிரிவு எண்ணிக்கை | மொத்தப் பரப்பளவு |
|---|---|---|---|
| ஆனையூர் கிராமம் 1350/1, 1350/2, 1353/4, 1353/9 | 1 முதல் 68 வரை | 68 | 17700 ச.மீ |

**நிபந்தனைகள்**

1) பொதுபயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட்ட மனுதாரர் பத்திரப்பதிவு செய்து கொடுத்த இடங்களை தனது சொந்த பொறுப்பில் அரசின் பெயரில் பட்டாமாறுதல் செய்து கொடுக்கப்பட வேண்டும்.
2) மனுதாரர் பொதுபயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் கட்டுமானம் ஏதும் மேற்கொள்ளக் கூடாது மற்றும் சுற்றி கம்பி வேலி அமைக்கப்பட வேண்டும்.
3) தனிமனைகள் குறித்து நிலஉரிமம் மற்றும் மனை அளவுகள் விபரம் ஆகியவற்றில் ஏதேனும் குறைபாடுகளோ முறைகேடுகளோ தெரியவந்தால் மேற்படி உத்தரவு எந்தவித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.
4) இத்துடன் இணைக்கப்பட்டுள்ள சிறப்பு நிபந்தனைகள் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகளை முழுமையாக கடைபிடிக்கப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் வழங்கப்பட்ட மனைப்பிரிவு அங்கீகாரம் எந்தவித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

T.முத்துமாரி

தலைவர் (பொறுப்பு)
ஆனையூர் ஊராட்சி

இணைப்பு:
மனைபிரிவு அங்கீகார வரைபடம் மற்றும்
சிறப்பு நிபந்தனைகள்

பெறுநர்:
திருமதி.A.சீமாட்டி,
526, ஞானகிரி ரோடு,
சிவகாசி - 626 189.

நகல்:
1.துணை இயக்குநர், மாவட்ட ஊரமைப்பு அலுவலகம், விருதுநகர்.
2.மாவட்ட பதிவாளர், பத்திரப்பதிவு அலுவலகம், விருதுநகர்.
3.மாவட்ட ஆட்சியர் (ஊராட்சிகள் பிரிவு), விருதுநகர்.
4.சார்பதிவாளர் அலுவலகம், திருத்தங்கல்.

2499
12.7

91

விருதுநகர் மாவட்ட ஆட்சியர்/ஊராட்சிகளின் ஆய்வாளர் அவர்களின்
செயல் முறை ஆணை
பிறப்பிப்பவர்: திரு.ஜெ. மேகநாதரெட்டி, இ.ஆ.ப.,

RT5143787992IN
08/07/2022 14:22
virudhunagar collectorate SC <626002>

ந.க.எண்:உ இ1/2159/2022 நாள்: .07.2022

**பொருள்:** ஊராட்சி நிர்வாகம் - விருதுநகர் மாவட்டம் - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – சிவகாசி ஊராட்சி ஒன்றியம் - ஆணையூர் ஊராட்சி மன்ற தலைவர் திரு.வி.லட்சுமிநாராயணன் என்பவர் 06.06.2022 அன்று குற்ற வழக்கில் கைது செய்யப்பட்டு நீதி மன்றக் காவலில் விருதநகர் மாவட்ட சிறையில் இருப்பது - ஊராட்சியின் நிர்வாக நலன் கருதி ஆணையூர் கிராம ஊராட்சியின் துணைத்தலைவர் திருமதி.த.முத்துமாரி என்பவர் ஆணையூர் ஊராட்சியின் தலைவர்(பொறுப்பு)-ஆக செயல்படுவதற்கு அனுமதி வழங்கி ஆணையிடல்.

**பார்வை:**
1. சிவகாசி வட்டார வளர்ச்சி அலுவலரிடமிருந்து (கி.ஊ) வரப்பெற்ற கடிதம் ந.க.எண்:பி3/1972/2022, நாள்:13.06.2022, 27.06.2022(ம) 04.07.2022.
2. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 47 உட்பிரிவு (2),(3)

83

*******

**ஆணை:**

விருதுநகர் மாவட்டம், சிவகாசி ஊராட்சி ஒன்றியம், ஆணையூர் கிராம ஊராட்சி மன்றத்தலைவர் திரு.வி.லட்சுமிநாராயணன் என்பவர், எம்.புதுப்பட்டி காவல் நிலைய குற்ற எண்:46/2022 பிரிவு 120(B)147,148,341,342,324,302,506(II)IPC r/w 109 IPC பிரிவின் கீழ் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு விருதுநகர் மாவட்ட சிறையில் நீதிமன்ற காவலில் வைக்கப்பட்டுள்ளதாக சிவகாசி நகர காவல் ஆய்வாளர் கடிதம் சமர்ப்பித்துள்ளதாகவும், ஊராட்சியின் நிர்வாக நலன் கருதி ஊராட்சி செயல்பட நடவடிக்கை எடுக்குமாறும் பார்வை 1ல் காணும் வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)-ன் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு-47 உட்பிரிவு-(2),(3)-ன்படி தலைவர் ஆனவர் தம் அதிகார வரம்பு எல்லையில் தொடாந்து 30 நாட்களுக்கு மேல் இல்லாமல் இருக்கும் பொழுது தலைவரின் ஊராட்சி மன்றத் தலைவரின் அலுவல்களை

ஊராட்சியின் ஆய்வாளரால் நியமிக்கப்படும் நபரிடம் ஒப்படைப்பு செய்யலாம் என்பதன் அடிப்படையில் ஆணையூர் ஊராட்சி மன்றத் தலைவர் திரு.வி.லட்சுமிநாராயணன் என்பவர் 30 நாட்களுக்கும் மேலாக குற்ற வழக்கில் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் சிறையில் இருப்பதால் ஆணையூர் ஊராட்சி மன்றத் தலைவரின் பொறுப்புகளை நிர்வாக நலன் கருதி ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் திருமதி.த.முத்துமாரி என்பவரிடம் ஒப்படைப்பு செய்து ஆணையிடப்படுகிறது.

மாவட்ட ஆட்சியர்/
ஊராட்சிகளின் ஆய்வாளர்,
விருதுநகர் மாவட்டம்.

07/07/2022

பெறுநர்:

திருமதி.த.முத்துமாரி,
ஊராட்சி மன்றத் துணைத்தலைவர்,
ஆணையூர் கிராம ஊராட்சி,
சிவகாசி ஊராட்சி ஒன்றியம். (வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), சிவகாசி மூலமாக)

(உரிய வழிமுறையாக)

நகல்:

1. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), சிவகாசி ஊராட்சி ஒன்றியம்.
2. உதவி இயக்குநர்(தணிக்கை), விருதுநகர்.
3. திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, விருதுநகர்.
4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை இயக்குநர், சென்னை.

மே.கி.ந.க.எண்.பி3/1972/22 நாள் . 07.2022

சம்பந்தப்பட்ட ஊராட்சி துணைத் தலைவருக்கு சார்பு செய்ய -படுகிறது

வட்டார வளர்ச்சி அலுவலர்
(கிராம ஊராட்சி)
சிவகாசி.

12/07/2022

பெறுநர்
திருமதி.த.முத்துமாரி
ஊராட்சி மன்ற துணைத் தலைவர்,
ஆணையூர்



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate